DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No: CC.No.143/2017**

**prosecution witness: PW-5**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**A1, A2 present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதீஸ் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>07.01.2025</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் மண்டபம் வனச்சரகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்தபோது 04.11.2016ம் தேதி மண்டபம் சட்டம் ஒழுங்கு காவல்நிலைய காவல் ஆய்வாளர் திரு.பெரியசாமி அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மண்டபம் முல்லை நகரைச் சேர்ந்த அலெக்ஸ் என்பவரின் மனைவியான ரோஸ்மேரி என்ற மரிய ரோஸ் அவர்களின் வீட்டின் மாடியில் அரசால் தடைசெய்யப்பட்ட கடல் அட்டைகளை பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் காலை சுமார் 11.45 மணியளவில் மண்டபம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சோதனை செய்ததில் மரியரோஸ் என்பவரின் வீட்டு மாடியில் அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 30 கிலோ பச்சை கடல் அட்டைகள் சுமார் 10 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல்அட்டைகளும், கேஸ் அடுப்பு, சிலிண்டர் மற்றும் நீல நிற கேன் ஆகியவற்றை போலீசார் கைப்பற்றினர். மரிய ரோஸ் என்பவருடன் உடனிருந்த மண்டபம் சேது நகரைச் சேர்ந்த அப்துல் கரீம் என்பவரின் மகனான முகமது சபிபுல்லா என்பவரையும், பிடிபொருட்களுடன் சேர்த்து கைப்பற்றி காவல்அத்தாட்சி தயார் செய்து மாலை சுமார் 4.30 மணியளவில் மண்டபம் வனச்சரக அலுவலகத்தில் என்னிடம் ஒப்படைத்தார்கள். எதிரி மரிய ரோஸ் என்பவரிடம் மாலை 05.00 மணிக்கு என் முன்னிலையில் விசாரணை செய்து மண்டபம் காவல் சுற்று வனக்காப்பாளர் திரு.காளிதாஸ் என்பவரால் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 05.30 மணிக்கு முகமது சபிபுல்லாவிடம் என்முன்னிலையில் விசாரணை செய்து உச்சிப்புளி

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.07 18:43:28 +0530

காவல் சுற்று வனக்காப்பாளர் திரு.ராதா அவர்களால் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. **அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆகும்.** மேலும் எதிரிகள் மற்றும் பிடிபொருட்கள் விபரம் மண்டபம் காவல் சுற்று வனக்காப்பாளர் திரு.காளிதாஸ் அவர்களால் H நமூனாவில் பதிவு செய்யப்பட்டது. அந்த **H நமூனா அ.சா.ஆ.5** ஆகும். பின்பு பிடிபொருட்களின் விபரம் படிவம்–95 மூலம் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டது. அந்த **படிவம்–95 அ.சா.ஆ.6** ஆகும். கடல் அட்டைகள் அழுகி துர்நாற்றம் வீசும் என்பதால் நீதிமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டது. பின்பு எதிரிகளை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினேன். எதிரிகள் மீது வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு.9, 39(1)(a)(b)(d), 39(3)(a)(b)(c), 40(2),50, 51(1) ன் படி வனஉயிரின குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு இறுதியாக அபடிவம் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இந்த வழக்கின் 2வது எதிரி சபிபுல்லா இடத்திலோ, அவரது கைவசத்திலோ இருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கு சம்பந்தமாக மண்டபம் சட்ட ஒழுங்கு ஆய்வாளர் தனியறிக்கை எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளார். ஆய்வாளர் எங்கள் அலுவலகத்திற்கு வரும்போது மாலை 04.30 மணி இருக்கும். அவர் வரும்போது அவருடன் காவலர்கள் வந்தார்களா என்றால் ஞாபகம் இல்லை அவர் வந்தார். ஆய்வாளரையோ, அவருடன் வந்த காவலர்களையோ நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான் தனியறிக்கை படித்து பார்த்தேன். இந்த வழக்கை பொறுத்தவரை 2வது எதிரி சபிபுல்லா பற்றி ஆய்வாளர் எந்த விபரமும் தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றிய பொருட்கள் எல்லாம் கடற்கரையில் சாதாரணமாக கிடைக்கக்கூடியது என்றால் இல்லை.

இந்த வழக்கை பொறுத்தவரை காவ்ல ஆய்வாளர் நேரடியாக சென்று சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த பொருள்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் சம்பவம் நடந்த நேரமும், அத்தாட்சி தயார் செய்த நேரமும் ஒரே தேதி, ஒரே நேரம் ஆகும் என்றால் சரிதான். உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் இரண்டுமே ஒரே நேரத்தில் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல குற்றம் நடைபெற்றவுடன் சம்பவ இடத்தில் எதிரியிடம் பொருள்கள் இருந்ததால் உடனே அத்தாட்சி தயார் செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற வழக்குகள் அந்த காலகட்டத்தில் புள்ளிவிபரத்திற்காக போடப்பட்டது என்றால் சரியல்ல வனத்துறையில் மாதத்திற்கு இத்தனை வழக்குகள் போடவேண்டுமென்ற எந்த விதமான நிபந்தனையும் இல்லை எனவே நடந்த சம்பவங்களை அடிப்படையாக கொண்டு மட்டுமே வழக்குகள் பதிவு செய்யப்பட்டன புள்ளிவிபரத்திற்காக போடவில்லை. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.01.07 18:43:35 +0530